# ஹிந்து ராஷ்ட்ரம் ஏன் தேவை?

(What is the need for a 'Hindu Nation' ? - Tamil)

## முன்னுரை




உலகத்தில் கிறிஸ்தவர்களுக்கு 157, முஸ்லிம்களுக்கு 52, பௌத்தர்களுக்கு 12, யூதர்களுக்கு 1 என நாடுகள் உள்ளன. ஹிந்துக்களுக்கென்று ஒரு ராஷ்ட்ரம் இந்த சூர்யமண்டலத்தில் எங்கு உள்ளது? ஆம், ஹிந்துக்களுக்கென்று ஒரு ஸனாதன ராஷ்ட்ரம் 1947 வரை இந்த பூமியில் இருந்தது. இன்று அந்த ராஷ்ட்ரத்தின் நிலை என்ன?

### அப்போதைய பாரதமும் இன்றைய பாரதமும்!

1947-ல் ஒரு ரூபாய் கூட கடன் இல்லாத பாரதத்தில் இன்று ஒவ்வொரு குடிமகனின் தலையிலும் ரூபாய் 32,812 கடன் அழுத்துகிறது. 1947-ல் பாரதம் 33% வரை தன் பொருட்களை ஏற்றுமதி செய்தது; இன்று இது 1% அளவு குறைந்துள்ளது. பாரதத்தில் அப்பொழுது 10-20 வெளிநாட்டு நிறுவனங்களே இருந்தன; இப்பொழுது அந்த எண்ணிக்கை 5,000 -த்தை தாண்டி விட்டது.

அப்பொழுது ஒரு மாவட்டம் கூட மதக்கலவரத்திற்கு உட்படவில்லை; ஆனால் இப்பொழுது 300-க்கும் மேற்பட்ட அத்தகைய மாவட்டங்கள் உள்ளன. 1947-ல், பாரதத்தில் ஒரு குடிமகனுக்கு இரண்டு பசுக்கள் என்ற விகிதாசாரம் இருந்தது; இப்பொழுது பன்னிரண்டு குடிமகன்களுக்கு ஒரு பசு என்ற விகிதத்தில் பசு எண்ணிக்கை குறைந்து விட்டன. கர்சன் வைலீ போன்றோரை புதைக்க அவர்களின் நாட்டிற்கே திருப்பி அனுப்பியது பாரதம்; ஆனால் இப்பொழுதோ பாரதீய பாராளுமன்றத்தை 2001-ல் தாக்கிய அப்ஸல் குருவுக்கு 12 வருடங்களுக்கு பிறகே தூக்குமேடை கிடைத்தது!

விழிப்படைந்த தேசப்பற்று என்ற நிலையிலிருந்து தேசப்பற்றே இல்லாத நாடாக, ஊழலில்லாத தேசம் என்ற நிலையிலிருந்து ஊழலில் முதலிடம் வகிக்கும் நாடாக, அகண்ட, பரந்த எல்லையைக் கொண்ட தேசம் என்ற நிலையிலிருந்து காஷ்மீரை இழக்கும் அபாயத்திலுள்ள நாடாக பாரதத்தின் நிலை தாழ்ந்துள்ளது....... பட்டியல் நீள்கிறது.

கண்ணீர் உகுக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆனால் சிறிதும் வெட்கமே இல்லாத பாரதீய அரசியல்வாதிகள் களிப்புடன் சுற்றி வருகின்றனர். கடந்த அறுபது ஆண்டுகளில் பாரதம், மொஹம்மதிய ஆக்கிரமிப்பாளர்களைக் காட்டிலும் நயவஞ்சக ஆங்கிலேயரைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக அளவு ஜனநாயகத்தின் பலனான அரசியல்வாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்பதே நிதர்ஸனமான உண்மை. உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயகமான பாரதத்தின் அர்த்தம், 'மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் அரசாங்கம்' என்பதிலிருந்து 'சுயநலவாதிகளால் (அரசியல்வாதிகள்) சுயநல நோக்குடன் சுயநலவாதிகளுக்காக (பொதுமக்கள்) நடத்தப்படும் அரசாங்கம்' என மாறி விட்டது.

இந்நூல் பாரதம் இன்று எதிர்நோக்கும் பல பிரச்சனைகளை விவரித்துள்ளது. இவற்றைப் படித்தபின்னர், 'ஹிந்து ராஷ்ட்ரத்தில்' இந்த பிரச்சனைகள் எப்படி தீர்க்கப்படும் என சிலருக்கு தோன்றலாம். இது போன்று சரித்திரத்தில் இதுவரை நடந்துள்ளதா? இதற்கு பதில் – ஆம்! 'ஹிந்து தேசம்' (ஹிந்தவி ஸ்வராஜ்யம்) என சத்ரபதி சிவாஜி மஹராஜ் அறிவித்தவுடன் இது போன்ற பிரச்சனைகள் உடனே தீர்க்கப்பட்டன.

## சிவாஜி மஹராஜ் 'ஹிந்து ராஷ்ட்ர'த்தை ஸ்தாபித்தவுடன் எல்லா பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டன!

இன்று போல், சிவாஜி மஹராஜ் பிறப்பதற்கு முன்பு ஹிந்து பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. ஜீஜாபாயின் (சிவாஜி மஹராஜின் தாய்) நாத்தனார் ஒரு முஸ்லிம் படைத்தலைவனால் கடத்தப்பட்டாள். கோவில்கள் உடைக்கப்பட்டன; பசு வதை எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற நிலை. சிவாஜி மஹராஜ் 'ஹிந்து ராஷ்ட்ர'த்தை ஸ்தாபித்தவுடன் கோவில்களை உடைப்பது உடனே நின்றது. அதோடு கோவில்கள் உடைக்கப்பட்டு அவ்விடத்தில் இருந்த மசூதிகள் மறுபடியும் கோவில்களான புனருத்தாரணம் செய்யப்பட்டன. மௌனமாக கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த பசுக்கள் ஆனந்தத்துடன் குரல் எழுப்பத் துவங்கின. எந்த கையெழுத்து போராட்டமும்

நடக்கவில்லை, சிவாஜி மஹராஜ் தன் அமைச்சர் குழாமுடன் சேர்ந்து எந்த 'பசுவதை தடை சட்டமும்' அமுல்படுத்தவில்லை. 'ஹிந்து ராஷ்ட்ர' ஸ்தாபனம் என்ற ஒன்றே ஹிந்து துரோகிகளை நடுங்கச் செய்தது!

இன்று நாம் எல்லோரும் விலைவாசி உயர்வால் அவதிக்குள்ளாகி-றோம். சிவாஜி மஹராஜ் காலத்தில் விலைவாசி உயர்வால் மக்கள் கஷ்டப்பட்டனர் என்று எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? 'ஜய் ஜவான், ஜய் கிசான்' (ராணுவ வீரனுக்கு வெற்றி, விவசாயிக்கு வெற்றி) என கோஷம் போடும் அரசியல்வாதிகள், ராணுவ வீரனும் விவசாயியும் ஒரு நாயைப் போன்று இறப்பதை தடுக்கவில்லை. ஒவ்வொரு விவசாயியின் உயிரை மட்டுமன்று, அவனின் விளைச்சலையும் விலைமதிப்பற்றதாக சிவாஜி மஹராஜ் கருதினார். 'விவசாயி உழைப்பால் விளைந்த ஒரு சிறு செடிக்கும் தீங்கு ஏற்படக் கூடாது' என்பதே அவரின் ஆணையாக இருந்தது. விவசாயியைப் போன்று ஒவ்வொரு ராணுவ வீரனின் உயிரையும் விலைமதிப்பற்றதாக கருதினார். போரில் காயமடைந்த ராணுவ வீரனுக்கு உரிய மரியாதை செய்து பொன் பொருட்களை மானியமாக அள்ளி வழங்கினார். 2010-ல் கார்கில் போரில் இறந்த ராணுவ வீரர்களின் விதவைகளுக்காக 'ஆதர்ஷ் குடியிருப்பு சங்கம்' கட்டப்பட்டது; ஆனால் ஒரு விதவைக்குக் கூட இதில் ஒரு குடியிருப்பும் கிடைக்கவில்லை. எல்லா குடியிருப்பு-களையும் ஊழல் பேர்வழிகள் அபகரித்துக் கொண்டனர். இதற்கு மாறாக சின்ஹகட் போரில் தாணாஜி இறந்தபோது சிவாஜி மஹராஜ் அவரின் குடும்பத்தினரை பார்த்துக் கொண்டதோடு தாணாஜியின் மகனின் கல்யாணத்தையும் தானே நடத்தி வைத்தார்.

## வெளிநாட்டு பிரச்சனைகளும் 'ஹிந்து ராஷ்ட்ர'த்தில் தீர்த்து வைக்கப்படும்!

உள்நாட்டு பிரச்சனைகளைப் போலவே வெளிநாட்டு பிரச்சனைகளும் 'ஹிந்து ராஷ்ட்ர'த்தில் தீர்த்து வைக்கப்படும். நம் தேசத்தை எதிர்நோக்கும் மிக முக்கிய வெளிநாட்டு பிரச்சனை பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான போர் அபாயம். இது போன்ற ஒரு பிரச்சனை சிவாஜி மஹராஜ் காலத்திலும் இருந்தது. சிவாஜி

மஹாராஜின் சிறிய ராஜாங்கத்தை விழுங்கி விட நினைத்தான், ஔரங்கஜீப். 'ஹிந்து ராஷ்ட்ர' ஸ்தாபனம் மற்றும் சிவாஜி மஹாராஜின் மிக பிரம்மாண்டமான முடிசூட்டு விழாவைப் பற்றிக் கேட்டவுடன் நடுநடுங்கிப் போனான். பிறகு, சிவாஜி மஹாராஜின் காலம் வரை மஹாராஷ்ட்ராவை நெருங்கவும் பயந்தான். தென்னிந்தியாவைப் பற்றிய கேள்விக்கு இடமே இல்லை. 'ஹிந்து ராஷ்ட்ர' ஸ்தாபனமான பின்பு எந்த நாடும் நம்மோடு மோதுவதற்கு தயங்குவர்.

சுருக்கமாக, பாரதம் எதிர்கொள்ளும் எல்லா பிரச்சனைகளையும் ஆன்மீக பற்றுடைய ஆட்சியாளர்கள் தீர்த்து வைப்பர்; எல்லா குடிமக்களும் நன்நடத்தை மூலம் மகிழ்ச்சியுடன் இருப்பர்.

## ஓரிரண்டு பிரச்சனைகளுக்காகபோராடுவதைக் காட்டிலும் 'ஹிந்து ராஷ்ட்ர'த்தை ஸ்தாபனம் செய்வது மிகவும் அவசியம்!

பாரதீய மக்களுக்காக மட்டுமல்ல உலக மக்களின் நலனுக்காக ஸ்தாபிக்கப்படும் 'ஹிந்து ராஷ்ட்ரம்' தானாக ஏற்பட்டு விடாது. பாண்டவர்களுக்கு ஐந்து கிராமங்களே போதுமானதாக இருந்தாலும் அவை கூட சுலபமாக கிடைக்கவில்லை. நம்முடைய இலக்கு காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி முனை வரை பரந்து அகண்ட ஹிந்து ராஷ்ட்ரத்தை ஸ்தாபனம் செய்வது ஆகும். இதற்காக பெரும் போராட்டம் நடத்த வேண்டி உள்ளது. பாரதம் எதிர்கொள்ளும் ஓரிரண்டு பிரச்சனைகளை (உதாரணம் பசுவதை, மதமாற்றம், கங்கை நதி மாசு, காஷ்மீர் பிரச்சனை, ராமர் கோவில், தாய்மொழி பாதுகாப்பு) எதிர்த்து தனித்தனியாக போரிடுவதற்கு பதிலாக அனைத்து ஹிந்து ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து 'ஹிந்து ராஷ்ட்ர' ஸ்தாபனத்தை இலக்காக கொண்டு செயல்பட்டால், போராடுவது சுலபமாகும்.

ஹிந்து தர்மத்தின் உன்னத தத்துவ ஞானிகளான ஸ்வாமி விவேகானந்தர், யோகி அரவிந்தர், பரம் பூஜ்ய கோல்வல்கர் குருஜி, ஸ்வாதந்த்ரிய வீர ஸாவர்க்கர் போன்றோர் வழிவகுத்த இந்த தர்ம போராட்டத்தில் பங்கு கொள்ள அனைத்து ஹிந்துக்களுக்கும் உடல், மனம், புத்தி மற்றும் ஆன்மீக சக்தி கிடைக்க வேண்டும் என்பதே ஸ்ரீ குருவின் சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை! – **தொகுப்பாளர்**

# அட்டவணை

(சில முக்கிய குறிப்புகள் * சின்னத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது)

**1. அறிமுகம் 15**

1 அ. 'ஹிந்து' வார்த்தையின் உற்பத்தி 15

1 ஆ. தேசத்தின் பலவித பெயர்கள் மற்றும் இதிஹாஸம் 16

**2. தேசீய கஷ்டங்களின் கண்ணோட்டத்தில் 'ஹிந்து ராஷ்ட்ரம்' ஏன் தேவை? 20**

2 அ. சமூக ஒற்றுமைக்காக 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்! 20

* இட ஒதுக்கீடு - தரத்தை தாழ்த்தும் கொள்கை! 21

2 இ. சரியான கல்விமுறை கிடைக்க 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்! 23

2 ஈ. விளையாட்டுத் துறையை மேம்படுத்த 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்! 25

2 உ. தாய்மொழியைக் காப்பாற்றும் கண்ணோட்டத்தில் 'ஹிந்து ராஷ்ட்ரத்தின்' அவசியம்! 26

* அதிகரிக்கும் விவசாயிகளின் தற்கொலை 28

* சாதாரண மக்களின் தினசரி வாழ்வை போராட்டமாக்கியுள்ள விலைவாசி ஏற்றம் ! 29

* வேலையில்லாத் திண்டாட்டம் 30

* வறுமை 30

* திசையில்லாத பொருளாதார கொள்கைகள் 31

* பங்குசந்தை 32

* பாரத பொருளாதாரத்தை சீர்குலைக்கும் கறுப்புப் பணம்! 32

2 ஏ. ஊழலை ஒழிக்க 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்! 33

2 ஐ. தீயவர்களிடமிருந்து பாதுகாப்புப் பெற 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்! 37

* அதிகரித்து வரும் சிறுவர் செய்யும் குற்றங்கள்! 38

* பாரதத்தில் பெண்களின் பாதுகாப்பற்ற நிலை 38

* நக்ஸல்வாதம் 39

* பிரிவினைவாதம் 41

* தீவிரவாதம் 43

* எதிரி நாடுகள் நடத்தும் மறைமுகத் தாக்குதல் 45

2 ஒ 6. பாரதீய ராணுவ வீரர்களின் பரிதாப நிலை 48

**3. மத பிரச்சனைகள் கண்ணோட்டத்தில் ஏன் 'ஹிந்து ராஷ்ட்ரம்' அவசியம்? 49**

* அதிகரிக்கும் ஹிந்துக்களின் மதமாற்றம் 49

* இளம் ஹிந்து பெண்களை சீரழிக்கும் 'லவ் ஜிஹாத்'! 50

* காந்தீய கொள்கை – ஒரு கண்மூடித்தனமான நம்பிக்கை! 52

* 'ஸர்வதர்மஸமபாவம்' – அர்த்தமில்லாத கொள்கை! 53

* கண்மூடித்தனமாக மேற்கத்திய கலாச்சாரத்தை பின்பற்றும் பாரத மக்களின் சில உதாரணங்கள் 55

* மஹான்களை இழிவுபடுத்த நடக்கும் சூழ்ச்சி! 60

* கோயில்களில் அதிகரிக்கும் திருட்டு! 61

* சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவர்கள் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களை திருப்திப்படுத்துதல் ! 65

* காஷ்மீரில் உள்ள ஹிந்துக்கள் இன்னும் மறுவாழ்வு பெறாதது துயரமான விஷயம்! 69

* உலகம் முழுவதும் உள்ள ஹிந்துக்களை பாதுகாக்க 'ஹிந்து ராஷ்ட்ரம்' இன்றியமையாதது! 71

**4. தற்போதுள்ள ஆட்சியின் அமைப்பை காட்டிலும் 'ஹிந்து ராஷ்ட்ரம்' எவ்வாறு சிறந்தது ? 74**

* குறைபாடுள்ள தேர்தல் முறை ! 81

* குறைபாடுள்ள நிர்வாக சாதனங்கள்! 88

* நீதித்துறையின் பரிதாபகர நிலை! 90

* ஒழுங்கற்ற ஊடகங்கள் 93

* ஜனநாயகத்தின் தற்போதைய மோசமான நிலை! 96

* உலகத்தில் தற்போது உள்ள ஆளும் முறைகளின் பயனின்மை! 98

**5. தர்மவழி நடக்கும் 'ஹிந்து ராஷ்ட்ரம்' என்றால் என்ன? 105**

* 'ஈச்வர ராஜ்யம்' என்பது இறைவனின் சங்கல்பத்தால் உருவாக்கப்பட்ட சமூக அமைப்பு! 105

**6. தர்மவழி நடக்கும் 'ஹிந்து ராஷ்ட்ரத்தை' ஸ்தாபிக்க பங்களிப்பதன் அவசியம்! 106**

**7. அகில மனித குல நலனுக்காக ஹிந்து தர்ம வழி நடக்கும் அரசாங்கம் அவசியம்! 109**

* உலக அழிவை தவிர்க்க ஒரே தீர்வு! 110

**8. ஆதர்ச 'ஹிந்து ராஷ்ட்ரம்' இவ்வாறிருக்கும்! 112**

**卐 பிற்சேர்க்கை 1 - 'ஹிந்து ராஷ்ட்ரம்' மற்றும் 'ஹிந்து ராஷ்ட்ர கோரிக்கை' அரசியலமைப்பிற்கு உட்பட்டதா இல்லையா? 114**

## ஹிந்து ராஷ்ட்ர மற்றும் தர்மத்திற்காக அயராது உழைக்கும் மஹான் குரு பரம் பூஜ்ய டாக்டர் ஆடவலே!

'ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதி'யின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் பரம் பூஜ்ய டாக்டர் ஆடவலே அவர்கள் ஹிந்து ராஷ்ட்ரம் மற்றும் தர்மத்திற்காக அயராது உழைக்கும் மஹான் குரு ஆவார். அவர் மிகச் சிறந்த காரியங்களை செய்வதோடு கூட எங்களுக்கும் பூரண ஆதரவைத் தருகிறார். நாங்கள் செய்யும் காரியங்களும் அவரின் காரியங்களைப் போன்றதே; இறைவன் எங்களின் காரியங்களுக்கு என்றும் துணை புரியட்டும்!'

**- ஜகத்குரு பரம் பூஜ்ய நரேந்த்ராச்சார்யஜி மஹாராஜ், ரத்னகிரி, மஹாராஷ்ட்ரா.** (4.11.2011)